## இதுவரை இல்லாத அளவிற்கு உணவு மானியமாக ரூ.14 ஆயிரம் கோடியை ஒதுக்கித் தந்த முதல்வருக்கு நன்றி ! கழக ஆட்சியில்

# 1 கோடியே 66 லட்சத்து 31 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்து சாதனை!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் அர.சக்கரபாணி பதிலுரையில் பெருமிதம்!

**சென்னை, ஏப். 12 -**

**இதுவரை இல்லாத அளவிற்கு உணவு மானியமாக ரூ.14 ஆயிரம் கோடியை ஒதுக்கித் தந்த முதல்வருக்கு நன்றி என்றும் - நான்காண்டு கால கழக ஆட்சியில் ஒரு கோடியே 66 லட்சத்து 31 ஆயிரத்து 198 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்து சாதனை படைக்கப்பட்டுள்ளது என்றும் சட்டப்பேரவையில் உணவுத் துறை மானியக் கோரிக்கை மீதான பதிலுரையில் அமைச்சர் அர.சக்கரபாணி பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

அமைச்சர் அர.சக்கரபாணி அளித்த பதிலுரை வருமாறு:

தமிழ்நாட்டைத் தரணியில் உயர்த்திட அடித்தளமிட்ட தந்தை பெரியார் அவர்களை வணங்குகிறேன். தமிழ்நாடு என்ற அடையாளத்தை மீட்டுத் தந்த பேரறிஞர் அண்ணா அவர்களை வணங்குகிறேன்.

கணினியையும் செயற்கை நுண்ணறிவையும் சங்கத் தமிழுடன் இணைத்து நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதாரப் பிதாமகர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் துயில் கொண்டுள்ள திசை நோக்கி வணங்குகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்றதிலிருந்து சந்தித்த அனைத்து தேர்தல்களிலும் தொடர்ந்து வென்ற ஒரே தலைவர், இந்தியாவில் உள்ள முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக 'எல்லாருக்கும் எல்லாம்' என்ற தாரக மந்திரத்தை அடிப்படையாகக் கொண்டு, சாதி மத, பேதமின்றி தமிழ்நாட்டின் அனைத்து மக்களும் அனைத்துப் பகுதிகளும் சமச்சீர் வளர்ச்சி அடைய வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்துடன் தமிழகத்தில் பொற்கால ஆட்சி நடத்தி வரும் திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.

தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்,

மீண்டும் தர்மம் வெல்லும் என்ற வாக்கிற்கேற்ப முதலமைச்சர் அவர்கள் பொறுமையாக சட்டப் போராட்டம் நடத்தி, மாநிலத்தின் சுயாட்சியை மீட்டெடுத்திருக்கிறார்கள். சூதினை வென்று தர்மத்தை வாழ வைத்த நமது தன்னிகரில்லா முதல்வர் அவர்களை வணக்கத்துடன் பாராட்டி மகிழ்கிறேன்.

இந்திய வரலாற்றிலேயே மிகப் பெரிய தீர்ப்பை உச்ச நீதிமன்றத்திலிருந்து பெற்றுத் தந்த முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் அமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் முதல் அரசு முறைப் பயணமாக திண்டுக்கல் மாவட்டத்திற்கு 23-12-2022 அன்று வருகை தந்து, (குறுக்கீடுகள்) ஒட்டன்சத்திரம் தொகுதியில் அமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் முதல் அரசு பயணமாக திண்டுக்கல் மாவட்டத்திற்கு 23-12-2021 அன்று வருகை தந்து, ஒட்டன்சத்திரம் தொகுதியில், இடைகோட்டையில் சுமார் 6,000 மாணவர்களை வைத்து, இரண்டு மணி நேரத்தில் சுமார் 160 ஏக்கர் நிலத்தில் 6,40,000 மரக் கன்றுகளை நட்டு உலக சாதனை நிகழ்வினைத் தொடங்கி வைத்து, இன்று ஆள் போல் தழைத்து, அருகு போல் வேரூன்றி வளர்ந்து வரும் உலக சாதனை நிகழ்வைத் தொடங்கி வைத்து இன்று ஆல் போல் தழைத்து அருகு போல் வேரூன்றி வளர்ந்து வரும் இளைஞர்களின் எழுச்சி நாயகர் வருங்கால தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம், திராவிட இயக்கத்தின் ஐந்தாம் தலைமுறை துணை முதலமைச்சர் அவர்களுக்கு எனது அன்பு வணக்கம்.

பேரவைத் தலைவர் அவர்களுக்கும், அவை முன்னவர் நீர்வளத்துறை அமைச்சர் அண்ணன் துரைமுருகன் அவர்களுக்கும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அண்ணன் கே.என். நேரு அவர்களுக்கும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அண்ணன் இ. பெரியசாமி அவர்களுக்கும், வனத்துறை அமைச்சர் அண்ணன் முனைவர் க. பொன்முடி அவர்களுக்கும், பொதுப் பணித் துறை அமைச்சர் அண்ணன் எ.வ. வேலு அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அண்ணன் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களுக்கும், நிதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களுக்கும், ஏனைய அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்றக் கட்சிகளின் தலைவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது அன்பு வணக்கம்.

1996 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து ஆறாவது முறையாக என்னைத் தேர்தெடுத்து இந்த மாமன்றத்திற்கு அனுப்பிய உயிருக்கும், உயிரான ஒட்டன்சத்திரம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், எனது வெற்றிக்கு பாடுபட்ட கழக முன்னோடிகளுக்கும், தோழமைக் கட்சிகளின் நண்பர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னை வளர்த்து ஆளாக்கிய தாய், தந்தையையும் இந்த நேரத்திலே வணங்குகிறேன். ஐந்தாவது முறையாக உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறையின் மானியக் கோரிக்கையை இந்த மாமன்றத்தில் சமர்ப்பித்திட வாய்ப்பு வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கு உள்ளம் நிறைந்த

## டெல்டா அல்லாத மாவட்டங்களில் நவீன சேமிப்பு வளாகங்கள்!

நன்றியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். 2025-2026 ஆம் ஆண்டிற்கு உணவு மானியமாக இதுவரை இல்லாத அளவிற்கு 14,000 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்தமைக்காக முதலமைச்சர் அவர்களுக்கும், நிதித் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் பெரும்பான்மையான மக்கள் நெல் விளைச்சலை மட்டுமே நம்பி வாழ்ந்து கொண்டிருந்ததைக் கண்கூடாக அறிந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட தாயுள்ளத்தோடு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தை 1972 ஆம் ஆண்டு உருவாக்கினார்கள்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆட்சியில் பொன்விழா கண்ட அந்நிறுவனத்திற்குப் பங்கு மூலதனமாக 2,000 கோடி ரூபாயை அள்ளி வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்குத் தஞ்சைத் தரணி மற்றும் அனைத்து மாவட்டங்களின் நெல் விவசாயிகள் சார்பாக என் நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் 2007-2008 ஆம் ஆண்டு நெல்லுக்கான ஊக்கத் தொகை சன்ன இரகத்திற்கு ரூ.70/-ம், பொது இரகத்திற்கு ரூ.50/-ம் முதன் முதலாக வழங்கப்பட்டது. கடந்த பத்தாண்டு கால ஆட்சியிலே நெல்லுக்கான ஊக்கத் தொகை வழங்கப்படவில்லை. 2021 ஆம் ஆண்டு முதலமைச்சர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்பு, சொல்வதையும் செய்வோம்; சொல்லாததையும் செய்வோம் என்ற தாரக மந்திரத்தை அடிப்படையாகக் கொண்டு, நெல்லுக்கான ஊக்கத் தொகையை 2021 ஆம் ஆண்டு சன்ன இரகத்திற்கு

ரூ.70/-லிருந்து ரூ.100/-ம், பொது இரகத்திற்கு ரூ.50/-லிருந்து ரூ.75/-யும் உயர்த்தி கொடுத்து, கடந்த 2024-2025 ஆம் ஆண்டு சன்ன இரகத்திற்கு ஊக்கத் தொகை ரூ.130/-, பொது இரகத்திற்கு ஊக்கத் தொகை ரூ.105/-. கடந்த 1-9-2024 முதல் சன்ன இரகம் குவிண்டால் ஒன்றிற்கு ரூ.2,450/- என்று விவசாயிகளிடமிருந்து நெல் வாங்கப்படுகிறது. அதேமாதிரி பொது இரகம் நெல் குவிண்டால் ஒன்றிற்கு ரூ.2,405/-க்கு விவசாயிகளிடமிருந்து வாங்கப்படுகிறது. முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே கூறியபடி, வருகின்ற 1-9-2025 முதல் நெல் குவிண்டால் ஒன்றிற்கு ரூ.2,500/- வழங்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பல சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்கள் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களெல்லாம் தி.மு.க. தேர்தல் அறிக்கையில் சொன்ன நெல் குவிண்டால் ஒன்றிற்கு ரூ.2,500/- என்ன ஆனது என்று கேட்கிறார்கள். இந்தப் பதிலுரையை இந்த நேரத்திலே நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு கூடுதலான விலையும் கிடைப்பதற்கு வாய்ப்பிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்ய

## இந்த ஆண்டில் மட்டும் 3393 நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பு!

கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு வழக்கமாக அக்டோபர் முதல் நாளிலிருந்துதான் நெல் கொள்முதல் தொடங்கப்படும். அன்றிலிருந்துதான் உயர்த்தப்பட்ட விலையும் கொடுக்கப்படும். செப்டம்பரிலேயே அறுவடை செய்தாலும் அக்டோபர் வரை காத்திருந்து மழைக்காலத்தில் கொள்முதல் செய்திடும் நிலையை மாற்றிட ஒன்றிய பிரதமருக்கு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதி உயர்த்தப்பட்ட விலையில் செப்டம்பர் முதல் நாளிலிருந்தே நெல் கொள்முதல் பணியினைத் தொடங்க வழிவகுத்தவர் நம் முதலமைச்சர் அவர்கள்.

தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக செப்டம்பர் முதல் நாளிலிருந்து நெல் கொள்முதல் பணியைத் தொடங்கி வருகிறோம்.

2022-2023 ஆம் ஆண்டில் என்றும் இல்லாத அளவிற்கு 4,019 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன. 2024-2025 ஆம் ஆண்டில் 3,393 நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. விவசாயிகளின் வசதிக்காக நெல் கொள்முதல் நிலையங்களை அதிக அளவில் திறந்து வருகிறோம்.

இந்த ஆண்டு இதுவரை 3.83 இலட்சம் விவசாயிகளிடமிருந்து 29.46 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு, 7 ஆயிரத்து 186 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. கழக ஆட்சி பொறுப்பேற்றது முதல் 1 கோடியே 66 இலட்சத்து 31 ஆயிரத்து 198 மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டு, 28 ஆயிரத்து 285 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சியின் 10 ஆண்டுகளில் கொள்முதல் செய்த நெல்லின் அளவைக் காட்டிலும், நாங்கள் 5 ஆண்டுகளிலே கூடுதலாகக் கொள்முதல் செய்திடுவோம் என்ற நிலையை எட்டிக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்த மாமன்றத்திலே சொல்லிக்கொள்ள பெருமைப்படுகிறேன்.

பத்தாண்டுகால அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில், ஒரு கோடியே 79 இலட்சத்து 81 ஆயிரத்து 152 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. நான்காண்டுகால கழக ஆட்சியில் ஒரு கோடியே 66 இலட்சத்து 31 ஆயிரத்து 198 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அ.தி.மு.க.வின் பத்தாண்டுகால ஆட்சியில் 27 ஆயிரத்து 972 கோடி ரூபாய் குறைந்தபட்ச ஆதார விலையாக வழங்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்றவுடன், இன்றைக்கு குறைந்தபட்ச ஆதார விலையாக 34 ஆயிரத்து 748 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. அதேமாதிரி பத்தாண்டுகால அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில், நெல்லுக்கான ஊக்கத் தொகை ஆயிரத்து 145 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற நான்காண்டு காலத்தில் ஆயிரத்து 613 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

தற்போது, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் அதிகபட்சமாக நாளொன்றுக்கு 20 மெட்ரிக் டன் மட்டுமே நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. விவசாயிகளிடமிருந்து மூட்டைகளில் இல்லாமல் மொத்தமாக நெல் கொள்முதல் செய்து, தானியங்கி முறையில் சுத்தம் செய்து, துல்லிய எடையுடன் சாக்குப் பைகளில் நிரப்பி தைத்து, கன்வேயர் மூலமாக லாரிகளில் ஏற்றும் முறையில் நாளொன்றுக்கு 200 மெட்ரிக் டன் கொள்முதல் செய்யும் அதிதிறன் கொண்ட நெல் கொள்முதல் நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டு, சோதனை முறையில் இதைச் செயல்படுத்திட தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியத்திலுள்ள பஞ்சநதிக்கோட்டை கிராமத்தில் சுமார் ஒரு கோடியே 39 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அதிதிறன் கொண்ட நெல் கொள்முதல் நிலையம் கடந்த 29-3-2025 அன்று



திறக்கப்பட்டது. இது விவசாயிகளின் மத்தியிலே மிகுந்த வரவேற்பை பெற்றிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

### நிரந்தர நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்!

கழக ஆட்சியின் நான்காண்டுகளில், 280 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்ட திட்டமிடப்பட்டு, இதுவரை 145 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 44 நிலையங்களின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆனால், கடந்த ஆட்சியில் 54 நிலையங்களே கட்டப்பட்டன என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

### நவீன நெல் சேமிப்புத் தளங்கள்!

இந்தியாவிலே முதன்முறையாக தமிழ்நாட்டில் மேற்கூரையுடன்கூடிய நவீன நெல் சேமிப்புத் தளங்கள் கட்டப்பட்டு, திறக்கப்பட்டுள்ளன. கடந்த ஆட்சியில் திறந்தவெளி சேமிப்புக் கிடங்குகள் 90 இருந்தன. கழக அரசு பொறுப்பேற்றவுடன், படிப்படியாக அதைக் குறைத்துவிட்டோம்.

ஒரு நெல் மணிகூட வீணாகக் கூடாது என்று முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியதால் திறந்தவெளியில் வைக்காமல் மேற்கூரையுடன்கூடிய நவீன நெல் சேமிப்புத் தளங்களில் நெல் சேமிக்கப்படுகிறது. 333 கோடியே 7 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட 3 இலட்சத்து 62 ஆயிரத்து 850 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட நவீன நெல் சேமிப்புத் தளங்கள் தற்போது பயன்பாட்டில் உள்ளன. 40 ஆயிரத்து 500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட நெல் சேமிப்புத் தளங்களின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 18 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட நெல் சேமிப்புத் தளங்கள் கட்ட நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. வேளாண்மை நிதிநிலை அறிக்கை, 2025-2026 ஆம் ஆண்டில் டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் 3 இலட்சத்து 12 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட நவீன சேமிப்பு வளாகங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆக மொத்தம் இந்த ஆட்சி பொறுப்பேற்றது முதல் இதுவரை விவசாயிகளின் நலனை முன்னிறுத்தி, ரூபாய் 1,015 கோடியே 91 இலட்சம் மதிப்பீட்டில் 8 இலட்சத்து 34 ஆயிரத்து 600 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 87 மேற்கூரை அமைப்புடன்கூடிய நவீன நெல் சேமிப்பு வளாகங்கள் மற்றும் பொது

## நான்காண்டு காலத்தில் ரூ. 613 கோடி விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை!

விநியோகத் திட்ட கிடங்குகள் கட்டுவதற்கு அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த ஆட்சியின் 5 ஆண்டுகளில் 1 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகள் நாகப்பட்டினம் மாவட்டம், கோவில்பத்தில் கட்டப்பட்டன. அது கஜா புயலால் இடிந்து, மீண்டும் கட்டப்பட்டது. அதையும் நாங்கள்தான் பயன்பாட்டிற்குக் கொண்டுவந்தோம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உணவுப்பொருட்களைச் சேமித்து விரைவாக கடைகளுக்கு அனுப்பிட 48 கோடி ரூபாய் மதிப்பில் 26 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகள் கட்டப்பட்டு, திறக்கப்பட்டுள்ளன. 19 ஆயிரத்து 500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 260 பழைய கிடங்குகளைப் புதுப்பித்து, மேம்படுத்தும் பணிகள் முடிவுற்றுள்ளன.

கடந்த ஆட்சியில் 376 தனியார் அரவை ஆலைகள் மட்டுமே இருந்தன. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் அவர்கள் முகவர்களாகச் செயல்பட்டு வந்தனர். இந்திய உணவுக் கழகம் அந்த அரவை ஆலைகளுக்கெல்லாம் கலர் சார்ட்டர் இயந்திரங்கள் பொருத்தப்பட வேண்டுமென்று அறிவுரை கூறியிருந்தது.

ஆனால், அதை அந்த ஆட்சியில் அவர்கள் பின்பற்றவில்லை. ஆனால் முதலமைச்சர் அவர்கள் 2021 ஆம் ஆண்டு ஆட்சி பொறுப்பேற்ற பின்பு 376 ஆலைகளுக்கு பதிலாக, 623 ஆலைகளை உயர்த்தி எங்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வணிப கழகத்திற்கு சொந்தமான 21 MRM mill-களிலும் colour sorter என்ற இயந்திரம் 30 இலட்சம் முதல் 50 இலட்சம் ரூபாய் செலவில் அனைத்து அரிசி ஆலைகளிலும் அந்த இயந்திரத்தை பொருத்திய தன் காரணமாக மக்கள் மகிழும் வண்ணம் தரமான அரிசியை மக்களுக்கு நாங்கள் வழங்கி கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### வேலை வாய்ப்பு!

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 49 ஆயிரத்து 101 பேர் பணி புரிகின்றனர். கழக ஆட்சி பொறுப்பேற்றது முதல் இதுவரை 3,577 பேர்களுக்குப் பணி நியமனமும் 265 பேர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனமும் 669 பேர்களை நிரந்தரப் பணியாளர்களாக நாங்கள் நியமனம் செய்துள்ளோம்.

முதலமைச்சர் அவர்கள் கடந்த 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி, தஞ்சை மாவட்டத்தில் அரசு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, அங்கே நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் வேலை பார்க்கின்ற தொழிலாளர் பெருமக்களோ, பட்டியல் எழுத்தரோ, உதவுபவர்களோ, காவலர்களோ கூலி உயர்வோ, சம்பள உயர்வோ கேட்கவில்லை. ஆனால், முதலமைச்சர் அவர்கள் தாயுள்ளதோடு, சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு மூட்டை ஒன்றிற்கு ரூ.3.25 என்றிருந்த தொகையை 10 ரூபாயாக உயர்த்திக் கொடுத்தார். பருவ காலப் பட்டியல் எழுத்தர்களுக்குத் தினப்படியாக ரூ.120/-ம் (மேசையைத் தட்டும் ஒலி) அதே மாதிரி உதவுபவர்கள் மற்றும் காவலர்களுக்கு தினப்படியாக ரூ.100/- ஆக உயர்த்திக் கொடுத்தார். ஆண்டொன்றுக்கு 83 கோடி ரூபாய் கூடுதல் செலவானாலும் பரவாயில்லை, அந்த வேலை பார்க்கின்ற சுமைத் தூக்கும் தொழிலாளர்கள் பட்டியல் எழுத்தர், உதவுபவர், காவலர்களுக்கு அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரவேண்டும் என்பதற்காக தாயுள்ளத்தோடு ஆண்டுக்கு 83 கோடி ரூபாய் செலவானாலும் பரவாயில்லை என்று உயர்த்தியவர் முதலமைச்சர் அவர்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதே மாதிரி பொன் விழாவை முன்னிட்டு அனைத்து ஊழியர்களுக்கும் ஊக்கத் தொகையாக ரூ.1 கோடியே 64 இலட்சம் ரூபாயையும் வழங்கியவர் இன்றைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள்.

கழக ஆட்சியில் இதுவரை 19 இலட்சத்து 62 ஆயிரத்து 717 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இன்னும் குடும்ப அட்டைகள் சரிபார்க்கப்பட்டு வருகிறது. விரைவிலே இன்னும் புதிய குடும்ப அட்டைகள் வழங்க இருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்திலே உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### குடும்ப அட்டைகளின் தரவுத் தொகுப்பு!

புலம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்களின் பெயர்கள் குடும்ப அட்டைகளிலிருந்து நீக்கம் செய்யப்பட்டு அட்டைத் தரவுகளின் தொகுப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வகையில் 6 இலட்சத்து 11 ஆயிரத்து 887 குடும்ப அட்டைகள் இரத்து செய்யப்பட்டு, 27 இலட்சத்து 75 ஆயிரத்து 923 நபர்களின் பெயர்கள் நீக்கம் செய்யப்பட்டுள்ளன.

முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள் முன்னுரிமையுள்ள குடும்ப அட்டைகளாக இன்றைக்கு வகை மாற்றம் 16 இலட்சத்து 10 ஆயிரத்து 948 முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள் முன்னுரிமையுள்ள குடும்ப அட்டைகளாக வகை மாற்றப்பட்டுள்ளன. இதனால் 52 இலட்சத்து 29 ஆயிரத்து 820 பேர் பயனடைந்துள்ளனர்.

அதேமாதிரி குடும்ப அட்டை தொலைந்து விட்டால், நாம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கும், மாநகராட்சியில் துணை ஆட்சியர் அலுவலகத்திற்கும் செல்வோம், காலம் விரயமாகும், பணம் விரயமாகும். ஏனென்றால் application கொடுப்பதற்கு செல்வோம், அதே மாதிரி அட்டை வந்துவிட்டதா என்று பார்ப்பதற்கு இரண்டு முறை மூன்று முறை பேருந்தில் செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதையெல்லாம் நிவர்த்தி செய்கின்ற விதத்தில் கால விரயம், பண விரயத்தையும் குறைப்பதற்காக முதலமைச்சர் அவர்கள் அந்த நகல் அட்டையை online மூலமாக 50 ரூபாய் செலுத்தினால் அந்த நகல் அட்டை தபால் துறையின் மூலமாகவே வீடு தேடி வருகின்ற திட்டத்தை துணை முதலமைச்சர் அவர்கள் 5-4-2023 அன்று சென்னையில் தொடங்கி வைத்தார்கள். இதன்மூலமாக இன்றைக்கு இதுவரை 9 இலட்சத்து 44 ஆயிரத்து 452 பேர் அஞ்சல் வழியில் நகல் அட்டை பெற்றிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### புதிய நியாய விலைக் கடைகள்!

கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து 837 புதிய முழுநேரக் கடைகளும் 1,736 புதிய பகுதி நேரக் கடைகளும் ஆக மொத்தம் 2,573 கடைகள் திறக்கப்பட்டன. கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் பத்து ஆண்டு காலத்தில் திறக்கப்பட்ட கடைகள் முழுநேர கடைகள் 159, நாங்கள் நான்கு ஆண்டு கால ஆட்சியிலே திறக்கப்பட்ட கடைகள் 837, அவர்களுடைய ஆட்சி காலத்தில் பகுதிநேரக் கடைகள் 2,377, தி.மு.க. ஆட்சியில் திறக்கப்பட்ட 1,736 கடைகள், பத்து ஆண்டு ஆட்சி காலத்தில் அவர்கள் 2,536 கடைகள், தி.மு.க. ஆட்சியிலே 2,573 கடைகள். இதுவரை 47 மாதங்கள்தான் ஆகிறது. இன்னும் 4 ஆண்டுகள்கூட நிறைவு பெறவில்லை. இன்னும் 13 மாதம் எங்களுக்கு இருக்கிறது. அவர்களை விட 37 கடைகள் கூடுதலாக நாங்கள் 4 ஆண்டு காலத்திலே திறந்து இருக்கிறோம் என்பதை பெருமையாக சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் தங்கள் வாழ்விடங்களுக்கு அருகிலேயே பொருள்களைப் பெற மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க தொடர்ந்து புதிய பகுதி நேரக் கடைகள் திறக்கப்பட்டு வருகின்றன.

நான் ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர் அவர்களிடத்தில் சொல்லியிருக்கிறேன். உறுப்பினர்கள், அங்கிருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வழங்கல் அலுவலர் அவர்களிடத்தில் கோரிக்கை வையுங்கள் அந்தக் கோரிக்கையை ஏற்று, மாவட்ட ஆட்சித் தலைவர் அவரே அனுமதி கொடுக்கலாம், முடியாத சூழ்நிலையில் எங்களுக்கு அனுப்பினால், எங்களது தமிழ்நாடு நுகர்பொருள் Commissioner அவர்கள் பரிந்துரை செய்து எங்கள் Secretary, நான் கையெழுத்திட்டு, அந்த முழுநேரக் கடைகள், பகுதி நேரக் கடைகள் பிரிப்பதற்கு, வாய்ப்பு இருக்கிறது. எனவே, இந்த அரசை பொறுத்த அளவில் மக்களுடைய நலன்தான் முக்கியம்.

முதலமைச்சர் அவர்களே சொல்லியிருக்கின்றார்; எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையிலே இந்த அரசு செயல்பட்டு கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

### அமுதம் அங்காடிகள்!

19 அமுதம் மக்கள் அங்காடிகளும் 61 அம்மா அமுதம் அங்காடிகளும் தற்போது செயல்பட்டு வருகின்றன. இவற்றைப் படிப்படியாக நவீனமயமாக்கவும், புதிய அமுதம் மக்கள் அங்காடிகளைத் தேவைப்படும் இடங்களில் திறக்கவும் முடிவெடுக்கப்பட்டது. முதற்கட்டமாக அண்ணா நகர் மற்றும் கோபாலபுரம் அமுதம் அங்காடிகள் நவீனமயமாக்கப்பட்டன. கோபாலபுரம் அமுதம் அங்காடியை துணை முதலமைச்சர் அவர்களே திறந்து வைத்தார்கள். அண்ணாநகர் அமுதம் அங்காடியை நானும், அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் எம்.கே. மோகன் அவர்களும் திறந்து வைத்தோம். அதனுடைய பொருள், தரம், சரியான விலை, உங்களின் தேர்வு என்ற அடிப்படையிலே அந்த அங்காடியில் ஒரு குடும்பத்திற்கு ஒரு மாதத்திற்குத் தேவையான பொருட்கள் வாங்கினால் மாதம் ரூ.1,000 முதல் ரூ.1,500 வரை சேமிக்க முடிகிறது என்று அந்த மக்களே சொல்கிறார்கள். அதனால், பொது மக்கள் மத்தியிலே அமுதம் அங்காடிகள் நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கிறது.

புதுப்பிக்கப்பட்டு, சேவையின் தரம் அதிகரித்ததால், அந்த இரண்டு அமுதம் அங்காடிகளில் கடந்த காலங்களில் விற்பனையானதைவிட 10 மடங்கு விற்பனை இன்றைக்கு அதிகரித்துள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தும் நியாய விலைக் கடைகளையும் நவீனப்படுத்தத் திட்டமிடப்பட்டு முதற்கட்டமாக, 100 கடை

## 280 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு சொந்தக் கட்டிடங்கள்!

கள் தலா 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நவீனப்படுத்தப்பட்டு வருகின்றன. நேற்றைக்குகூட, இந்த மாமன்றத்திலே முதலமைச்சர் அவர்களின் அனுமதியுடன் சென்னையில் 6 அமுதம் அங்காடிகள் ரூ.22 கோடி மதிப்பீட்டிலும் அதேபோன்று, வண்டலூர், கீரப்பாக்கத்தில்

ரூ.11 கோடி மதிப்பீட்டில் உணவுப் பொருள் கிடங்கு அமைக்கவும் அறிவித்த இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறந்த நியாய விலைக் கடை. தமிழ்நாட்டில் மக்களுக்கு மிக நெருக்கமாகப் பணியாற்றும் நியாய விலைக் கடை விற்பனையாளர்களையும், கட்டுனர்களையும் ஊக்குவிக்க மாநில அளவில் ஆறு பேருக்கும் மாவட்ட அளவில் ஆறு பேருக்கும் ரொக்கப்பணமும் பாராட்டுச் சான்றிதழும் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன. அத்தாட்சி பிரதிநிதிகள் முதியோர், மாற்றுத் திறனாளிகள், மருத்துவமனையில் சிகிச்சை பெறக்கூடியவர்கள், என்னால் நியாய விலைக் கடைக்கு வர இயலாது, என் சார்பாக யாருக்காவது அந்தப் பொருளைக் கொடுங்கள் என்று பரிந்துரை செய்யும்பொருட்டு, நியாய விலைக் கடையில் இருக்கும் அந்த விண்ணப்பத்தை வாங்கி வட்டாட்சியர் அலுவலகத்திலோ, சென்னை மாநகராட்சி துணை ஆட்சியரிடத்திலோ பரிந்துரை செய்தால், அந்த விண்ணப்பத்தை ஏற்று அந்த வட்ட வழங்கல் அலுவலர், துணை ஆட்சியர் அவர்கள் அதற்கு ஒப்புதல் கொடுத்து, இன்றைக்கு அந்தப் பொருட்களை யார் முடியாது என்று சொல்கிறார்களோ, மருத்துவமனையில் சிகிச்சைப் பெறக்கூடியவர்கள் அவர்களுக்கு பதிலாக யாரை பரிந்துரை செய்கிறார்களோ அவர்கள் மூலமாக இன்றைக்கு பொருள் வழங்குகின்ற திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தியிருக்கிறது. இதுவரை

2 இலட்சத்து 44 ஆயிரத்து 767 பேர் இதன் மூலமாக பயன்பெற்றிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரே நாடு ஒரு குடும்ப அட்டை என்ற திட்டத்தின்கீழ் வெளி மாநிலங்களிலிருந்து இங்கு வந்து பணிபுரியும் 15 ஆயிரத்து 781 பேர் பயன் பெற்றுள்ளனர். தமிழ்நாட்டிற்குள்ளேயே 4 கோடியே 62 இலட்சத்து 32 ஆயிரத்து 451 பரிவர்த்தனைகள் நடைபெற்றுள்ளன என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, சென்ற 2023 ஆம் ஆண்டை சிறுதானிய ஆண்டாக ஐக்கிய நாடு அறிவித்தது. அந்தசமயத்திலே, முதலமைச்சர் அவர்கள் நீலகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் அரிசிக்குப் பதிலாக 2 கிலோ கேழ்வரகு வழங்க வேண்டும் என்று முடிவு செய்து 2023 ஆம் ஆண்டு மே மாதம் நீலகிரி மற்றும் தர்மபுரியில் அந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தோம். இதற்காக ஈரோடு, சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ராகி கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால் ராகி விவசாயிகளிடமிருந்து கிலோ ஒன்றுக்கு ரூ.42.90 காசுகள் விலையில் ராகியை நாங்கள் வாங்கிக் கொண்டிருக்கிறோம். இதனால் விவசாயிகள் மத்தியிலே நல்ல வரவேற்பு கிடைத்திருக்கிறது. இதுவரை தமிழ்நாட்டிலே 3,975 டன் கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டு 2,066 விவசாயிகளுக்கு ரூ.15 கோடியே 85 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

வழித்தட மேலாண்மைக்கு ஒன்றிய அரசின் பரிசு. இந்திய உணவுக் கழகக் கிடங்குகளிலிருந்து

## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 3577 பேருக்கு பணி நியமனம்!

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளுக்கும், அங்கிருந்து நியாய விலைக் கடைகளுக்கும் உணவுப் பொருட்களை விரைந்து எடுத்துச் செல்லவும் போக்குவரத்துச் செலவினைக் குறைப்பதற்கும் வழித்தட மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. முதற்கட்டமாக 1,871 நியாய விலைக் கடைகளுக்கு இதை வெற்றிகரமாகச் செயல்படுத்தியதில் 26 இலட்சத்து 54 ஆயிரத்து 425 ரூபாய் மீதமானது. இதற்காக ஒன்றிய அரசு 'அன்ன சக்ரா' நிகழ்வில் தமிழ்நாட்டிற்குப் பாராட்டுக் கேடயம் வழங்கியது. வழித்தட மேலாண்மையை அனைத்துக் கடைகளுக்கும் விரிவுபடுத்திட இந்த அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது.

பொது விநியோகத் திட்ட குறைதீர்க்கும் முகாம். அவர் சொன்னார்; நாங்கள் எங்கள் ஆட்சியில் மாதத்திற்கு ஒரு முறை, சனிக்கிழமை அன்று குறை தீர்க்கும் முகாம் நடத்துகிறோம் என்றார். முதலமைச்சர் அவர்களின் தலைமையில் அரசு பொறுப்பேற்ற பிறகு, குடும்ப அட்டைதாரர்களுக்கு வட்டம்தோறும் மாதத்திற்கு ஒரு முறை குறைதீர்வு முகாம் நடத்தப்பட்டு வருகிறது. மே 2021 முதல் மார்ச் 2025 வரை குடும்ப அட்டையில் பெயர் மாற்றம், முகவரி மாற்றம், அட்டை வகை மாற்றம் என்கிறவகையில், இதுவரை 2 இலட்சத்து 1,785 கோரிக்கைகள் ஏற்கப்பட்டுத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

விலைக் கட்டுப்பாட்டு நிதியம். நுகர்வோரின் நலனைப் பாதுகாக்கும்வகையில் வெளிச்சந்தையில் இன்றியமையாப் பண்டங்கள் விலையேற்றத்தினைக் கட்டுப்படுத்துவதற்காக சுமார் ரூ. 100 கோடி நிதியில் விலைக் கட்டுப்பாட்டு நிதியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தக்காளி, வெங்காயம் உள்ளிட்ட இன்றியமையாப் பொருட்களின் விலை உயரும்போதெல்லாம், கூட்டுறவுப் பண்ணைப் பசுமைக் கடைகள், கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகச்சாலைகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட நியாய விலைக் கடைகள்மூலம் மலிவு விலையில் விற்பனை செய்வதன்மூலம் விலை உயர்வு கட்டுப்படுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டில் பல ஆண்டுகளாக மாநில மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்களில், காலியாக இருந்த 31 தலைவர் மற்றும் 56 உறுப்பினர் பணியிடங்கள் விரைந்து நிரப்பப்பட்டன. தற்போதுள்ள காலிப் பணியிடங்களை நிரப்பிடும் பணி நடைபெற்று வருகிறது.

இதன் காரணமாக மே-21 அன்று மாநில அளவில் நிலுவையிலிருந்த 3 ஆயிரத்து 968 வழக்குகளும், மாவட்ட அளவில் நிலுவையிலிருந்த 11 ஆயிரத்து 252 வழக்குகளுடன் அதற்குப் பின்னர் கடந்த நான்கு ஆண்டுகளில் மாநில அளவில் தாக்கல் செய்யப்பட்ட 5 ஆயிரத்து 943 வழக்குகளையும், மாவட்ட அளவில் தாக்கல் செய்யப்பட்ட 19 ஆயிரத்து 914 வழக்குகளையும் தீர்வு கண்டு விரைந்து முடித்ததால் தற்போது மாநில அளவில் 4 ஆயிரத்து 181 வழக்குகளும், மாவட்ட அளவில் 4 ஆயிரத்து 29 வழக்குகளும் நிலுவையில் உள்ளன. இருபது மாவட்டங்களில் நூற்றுக்கும் குறைவான வழக்குகளே நிலுவையில் உள்ளன. நுகர்வோர் பாதுகாப்பை மேம்படுத்த விழிப்புப்பணி நிகழ்வுகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. நுகர்வோர் பாதுகாப்பில் சிறப்பாகச் செயல்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குப் பாராட்டுக் கேடயமும், நுகர்வோர் மன்றங்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றன. உலக நுகர்வோர் நாள், தேசிய நுகர்வோர் நாள் கொண்டாட்டங்களுடன் மாவட்டந்தோறும் பயிற்சிகள், மராத்தான் ஓட்டம், உணவுத் திருவிழா போன்றவை தொடர்ந்து நடத்தப்பட்டு, நுகர்வோர் விழிப்புப்பணி பரப்புரைகள் செய்யப்படுகின்றன.

முதலமைச்சர் அவர்கள் குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையை வலுப்படுத்திடவும், குற்றங்களைத் தடுப்பதற்காகவும் திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூரில் இரண்டு காவல் கண்காணிப்பாளர்கள் தலைமையில் புதியதாக இரண்டு மண்டலங்களை உருவாக்க ஆணையிட்டார்கள். புதியதாக உருவாக்கப்பட்ட 6 மாவட்டங்களில், 6 புதிய அலகுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

7-5-2021 முதல் 31-3-2025 வரையிலான நமது ஆட்சிக் காலத்தில் 27 கோடியே 69 இலட்சத்து 68 ஆயிரத்து 781 ரூபாய் மதிப்பிலான பொது விநியோகத் திட்டப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. மொத்தம் 35,569 வழக்குகள் பதியப்பட்டு 36,593 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பொது விநியோகத் திட்டப் பொருட்களின் தொடர் கடத்தலில் ஈடுபட்ட 301 நபர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு, 7 ஆயிரத்து 295 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. 8 ஆயிரத்து 611 வாகனங்கள் ஏலம்மூலம் தீர்வு செய்யப்பட்டுள்ளன. கடந்த ஆட்சியின் இதே காலகட்டத்தை ஒப்பிடும்போது, மூன்று மடங்குக்கும் மேலான அரிசி மற்றும் கலப்பட பெட்ரோலியப் பொருட்கள் உள்ளிட்ட இதர பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இரு மடங்குக்கும் மேலான கைதுகள், வாகனக் கைப்பற்றலில் 63% அதிகம், எடுக்கப்பட்ட துரித நடவடிக்கையால் வாகனக் கழிவில் 7 மடங்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை இங்கு குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்- இந்திய அளவில் அதிகக் கிடங்குகளைப் பதிவு செய்தமைக்காக தேசிய சேமிப்புக் கிடங்கு வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை ஆணையம், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்கு முதல் பரிசு வழங்கியுள்ளது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வாறு பதிவு செய்ததால்தான் கிடங்கு ரசீதுகளை வைத்து விவசாயப் பெருமக்கள் வங்கிகளில் கடன் பெற இயலும்.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் செயல் திறனை மேம்படுத்தி கடந்த நான்காண்டுகளில் மட்டும் 475 கோடியே 18 இலட்சம் ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டு 116 கோடியே 46 இலட்சம் ரூபாய் இலாபமடைந்துள்ளது. கடந்த ஆட்சியின் 5 ஆண்டுகளில் அடைந்ததைவிட நான்காண்டுகளிலேயே இலாபம் 12 விழுக்காடு அதிகரித்துள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த 4 ஆண்டுகளில் உணவுத் துறையின் சார்பாக 75 அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. அதில் 44 அறிவிப்புகள் நிறைவேற்றப்பட்டன. 25 அறிவிப்புகளுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. 6 அறிவிப்புகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதலமைச்சர் அவர்களின் அனுமதியின்பேரில் கீழ்க்கண்ட முக்கியமான அறிவிப்புகளை மட்டும் இங்கே படிக்கிறேன். அறிவிப்பின் பிற பகுதியை நான் படித்ததாகக் கருதி அவைக் குறிப்பில் பதிவேற்றம் செய்துகொள்ளும்படி பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி பதிலுரை வழங்கினார்.